தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 13, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 28, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்."

தீங்கு செய்தவருக்கே தீங்குகள் வந்து சேரும்; எனவே தீங்கற்ற வாழ்வை விரும்புகிறவர்கள், பிறருக்குத் தீங்கிழைத்தல் கூடாது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 41, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

41—

சார் பதிவாளர் அலுவலகம்

***2531—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளி மந்தயத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தயத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 42, திரு. செ. தாமோதரன், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

42—

வீட்டுமனைப் பட்டா

***4484—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை அருகே பெரிய பூலாங்கிணறில் இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாத மக்களுக்கு விரைவில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தகுதி வாய்ந்த அரசு புறம்போக்குப் பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்மீது விதிமுறைகளின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செ. தாமோதரன்.*